**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 31-10-2023**

**வேலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-31 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-11-01 | 2023-11-02 | 2023-11-03 | 2023-11-04 | 2023-11-05 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 15.0 | 2.0 | 10.0 | 20.0 | 18.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 29.0 | 29.0 | 29.0 | 30.0 | 30.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 22.0 | 22.0 | 22.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 96 | 96 | 96 | 94 | 94 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 86 | 86 | 86 | 84 | 84 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4 | 4 | 4 | 3 | 3 |
| காற்றின் திசை (கோணம்) | 70 | 70 | 70 | 90 | 90 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 8 | 8 | 7 | 7 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

நவம்பர் 1,2,3,4,5 தேதிகளில் மிகவும் லேசான மழை முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை29 முதல் 30 டிகிரி செல்சியஸ் ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 22 முதல் 23 டிகிரி செல்சியஸ் ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 94 முதல் 96 விழுக்காடாகவும், மாலைநேர காற்றின்ஈரப்பதம் 84 முதல் 86 விழுக்காடாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகமானது மணிக்கு 3 முதல் 4 கி.மீ வரை வடகிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை பொறுத்த வரையில் நவம்பர் 5 முதல் 11, 2023 வரை இயல்பைவிட அதிக மழை மற்றும் இயல்பான வெப்பநிலை காணப்பட வாய்ப்புள்ளது. நிலக்கடலை அறுவடைக்கு பிறகு உழவு செய்யும் விவசாயிகள், ஒரு கிலோ டிரைகோடெர்மா விரிடியை 50 கிலோ தொழுஉரத்துடன் கலந்து மண்ணில் இட வேண்டும். இவ்வாறு இடுவதால் மண் மூலம் பரவும் நோய்களை முன்கூட்டியே கட்டுப்படுத்தலாம். வரும் நாட்களில் லேசான மழை முதல்

| |
|---|
| மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்ற பணிகளை மழை நாட்களில் தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும். அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்க வேண்டும். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் நாட்களில் மிகவும் லேசான மழை முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. எனவே பயிர்கள் பாதிப்படையாமல் இருக்க வடிகால்வசதி அமைக்க வேண்டும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | வரும் நாட்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளதால் நெல் வயல்களில் வடிகால் வசதி மேற்கொள்ள வேண்டும். மேலும் உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்ற பணிகளை தற்காலிகமாக தள்ளி வைக்க வேண்டும் மற்றும் நீர் பாசனத்தை தள்ளி வைக்க வேண்டும். அறுவடைக்கு தயாராக உள்ள பயிர்களை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்க வேண்டும். |
| நிலக்கடலை | அறுவடைக்கு தயாராக உள்ள நிலக்கடலையை அறுவடை செய்து பாதுகாப்பான இடங்களில் சேமித்து வைக்க வேண்டும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தென்னை | காண்டாமிருக வண்டினை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 2 ரைனோ லூர் இனக்கவர்ச்சிபொறிகளை அமைக்க வேண்டும். |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடை கொட்டகைகளில் தரையை சுத்தமாகவும் தண்ணீர் தேக்கம் இல்லாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.மேலும் வாரம் ஒரு முறை பிளீச்சிங் பவுடர் தூவிவிட வேண்டும் .இது நோய் தொற்றை தடுக்க உதவும். மழைகாலமாக இருக்கும் காரணத்தினால் நீரில் நனைந்த அல்லது மூழ்கிய தானியங்களை / புண்ணாக்கை கால்நடைகளுக்கு கொடுப்பதை தவிர்க்க வேண்டும். ஏனெனில், சில சமயங்களில் அது காய்ச்சல் மற்றும் வயிற்றுப்போக்கை ஏற்படுத்தும். |

## கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை:

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கோழி | கோழி பண்ணையில் ஆழ்கூளம் ஈரமாகாமல் இருக்க மணலுடன் சுண்ணாம்புத்தூள் கலந்து உலர்ந்த நிலையில் |

| கோழிப்பண்ணை | கோழிப்பண்ணை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | பராமரிக்க வேண்டும். கோழிப்பண்ணையை சுற்றி மழைநீர் வடிகால் வசதி அமைக்க வேண்டும். |